**தேசிய லொத்தர் சபை - 2023**
---------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

தேசிய லொத்தர் சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று,உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானகாசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருன்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன், கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின்ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2023 திசெம்பா ்31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களைஇலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,சபையின்தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன், முகாமைத்துவமானது சபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சபைதொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின்நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின்வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால்கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபைஉள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின்தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின்தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும்,

எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின்தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின்செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின்நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க சபை செயற்படுகின்றதாஎனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இற்கு இணங்க அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்த போதும், மீளாய்வாண்டில் சபையினால் நடாத்திய விஷேட சீட்டிழும்பு மற்றம் விஷேட பரிசில்களை கணக்கீடு செய்யும் போது காசு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சாதாரண பரிசில் அமைப்பிற்கு மேலதிகமாக பரிசில் தொகுதி நிதியத்தை பயன்படுத்தி பாவனையாளர்களை ஊக்குவிப்பதற்காக (Customer Promotion) வழங்கப்படும் விஷேட பரிசில்கள் கணக்கீடு செய்யப்படும் போது, பரிசில்களிற்காக மாத்திரம் கணக்கீடு செய்யப்படும். உரிமை கோரப்படாத ஏற்புடைய காலம் முடிவடைந்த விஷேட பணம் மற்றும் பண்ட பரிசில் அரசுடமையாக்கல் மேற்கொள்ளப்படாததுடன் விஷேட பண்ட பரிசில் எதிர்வரும் சீட்டிழுப்பிற்காக பயன்படுத்தப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமம் 01 இன் பிரகாரம் சபையின் சாதாரண பரிசில் மற்றும் விஷேட பரிசில் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் 61 பந்திக் | வாசனா சம்பத லொத்தர் பத்திரத்தை ஆரம்பிக்கும் போது | கணக்கீட்டு நியமம் இலக்கம் 37 இன் |

| | | | |
|---|---|---|---|
| | முரணாக வாசனா சம்பத லொத்தரிற்காக ஒதுக்கிய ரூபா 99,904,204 தொகை அந்த லொத்தர் இரத்துச் செய்த பின்னர் இலாபத்திற்கு செம்மையாக்காமல் மஹஜன சம்பத லொத்தர் பரிசில் நிதியத்திற்கு செம்மையாக்கப்பட்டு இருந்தது. | சபைக்கு சொந்தமாக காணப்பட்டது மஹஜன சம்பத லொத்தர் மாத்திரமாவதுடன் அங்கு பரிசில் தொகுதி நிதியத்தின் மூலம் வாசனா சம்பதவிற்கு பரிசில் தொகை வழங்கப்பட்டுள்ளது. அந்த நிதியத்தின் பயன்பாட்டில் ஆரம்பிக்கப்பட்ட வாசனா சம்பத லொத்தர் விற்பனை நட்டமான வகையில் வீழ்ச்சியடைந்ததால் அந்த லொத்தரை முடிவுறுத்தும் போது அதன் பரிசில் தொகுதி நிதியத்தின் எஞ்சிய மீதியான ரூபா 72,247,855 பெறுமதியான மற்றும் அதன் பரிசில் கட்டுப்பாட்டுக் கணக்கில் உள்ள ரூபா 27,656,429 ஆன மீதியில் இருந்து ஒன்றுசேரும் ரூபா 99,904,204 ஆன தொகை மஹஜன சம்பத பரிசில் தொகுதி நிதியத்திற்கு மற்றும் பரிசில் கட்டுப்பாட்டு கணக்கிற்கு செம்மையாக்கப்பட்டு இருப்பதென. | பிரகாரம்வாசனா சம்பத லொத்தர் இரத்துச் செய்யப்பட்ட பின்னர் அந்த நிதியத்தில் மீதியை இலாபத்திற்கு சீராக்க வேண்டும். |

**1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய லொத்தர் சபையினால் மீளாய்வாண்டில் நடாத்திய 07 வகை லொத்தர்களின் விஷேட பணப் பரிசில் மற்றும் பண்டப் பரிசிலிற்காக செலுத்த வேண்டிய ரூபா 105,154,933 தொகை சபையின் கணக்குகளில் செலவு மற்றும் பொறுப்பாக சீராக்கப்பட்டு இருக்கவில்லை. அதனால் மீளாய்வாண்டில் சபையின் பரிசில் செலவு மற்றும் செலுத்த வேண்டிய பரிசில் பெறுமதி அப் பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது. மேலும், மேற்குறித்த பரிசில் பெறுமதியிலிருந்து ரூபா 21,671,746 தொகை 06 மாதங்கள் கடந்த உரிமை கோரப்படாத விஷேட பரிசில் ஆன போதும் அப் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டியதாக கணக்கீடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | லோத்தர் விற்பனையை உயர்த்துதல், பாவனையாளர் கவர்ச்சியை மூலோபாயமாக விஷேட பரிசிலாக உள்ளடக்கி உள்ளதுடன் விஷேட பரிசிலிற்காக ஒதுக்கியுள்ள தொகைக்காக சீராக்கம் செய்யப்படுவது அந்த பரிசிலிற்காக 06 மாதங்களினுள் பரிசாளர்கள் உரிமை கோரும் போது மாத்திரமாகும். | சபை நடாத்தும் ஒவ்வொரு லொத்தர் சீட்டி இழுப்பிற்காகவும் செலுத்த வேண்டிய மொத்த பரிசில் செலவை கணக்கீடு செய்ய வேண்டியதுடன் 06 மாதங்களை கடந்த உரிமை கோரப்படாத பரிசில் தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக பொறுப்பாக இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மஹஜன சம்பத் விஷேட சீட்டிழுப்பில் ரூபா 170,892,800 ஆன மொத்த விற்பனை வருமானத்தில் ரூபா 28,197,312 தொகை திரண்ட நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டிய போதும்,ரூபா 11,108,032 குறைவாக திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட்டு இருந்தது. | ஜயகிங் விஷேட சீட்டிழுப்பில் அந்த சீட்டிழுப்பிற்குரியதாக சரியாக கணக்கிடப்பட்ட லொத்தர் விற்பனையில் 10 சதவீத பங்களிப்பு விகிதமொன்றான ரூபா 17,089,280 தொை நேரடி பங்களிப்பு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | மஹஜன ஜயகிங் விஷேட சீட்டிழுப்பின் விற்பனை வருமானத்தில் 16.5 சதவீதம் அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | 2022 பெப்ரவரி முதல் 2023 திசெம்பர் வரை சபையின் வங்கிக் கணக்கிற்கு விற்பனை முகவர்களினால் வைப்புச் செய்த கூட்டுத் தொகை ரூபா 24,520,324 குறித்த கணக்கிற்கு சீராக்கப்படாது 2023 திசெம்பர் மாதத்திற்கு சமர்ப்பித்திருந்த வங்கி இணக்கக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த நிதி விற்பனை முகவர்களினால் கடன் அடிப்படையில் பெற்றுக் கொண்ட லொத்தரிற்காக வைப்புச் செய்துள்ள தொகை ஆவதுடன் அந்த நிதி அளவு 2024 ஆரம்ப காலாண்டில் குறித்த கணக்குகளிற்கு சீராக்கப்படாது எஞ்சியுள்ளது ரூபா 2,193,805 தொகை ஆவதுடன் அத் தொகையை எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். | விற்பனை முகவர்களினால் சபையின் வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யும் நிதி விரைவில் குறித்த கணக்குகளிற்கு சீராக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் மஹஜன சம்பத் ஜயகிங் லொத்தரிற்கு உரியதாக பரிசில் கொடுப்பனவு ரூபா 831,096 இனால் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மஹஜன சம்பத பரிசில் நிதியத்திற்கு மாற்றப்பட்ட ரூபா 831,096 தொகை 2024 சனவரி மாதம் கணக்கிணக்கம் செய்யும் போது திரண்ட இலாபக் கணக்கிற்கு சீராக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஆண்டின் பரிசில் கொடுப்பனவு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் மீதி | மோட்டர் வாகன போக்குவரத்து திணைக்கள அறிக்கை பிரகாரம் மீதி | வித்தியாசம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| கணக்காய்வினால் 2023 ஆகஸ்ட் 15 திகதி மோட்டர் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்கள் பிரகாரம், அந்த திணைக்களத்தில் பதிவு செய்திருந்த பின்வரும் சொத்துக்கள் தேசிய லொத்தர் சபையின் நிலையான சொத்து பதிவேட்டில் அல்லது வேறு | | | | இங்கு குறிப்பிடும் வாகனங்கள் தேசிய லொத்தர் சபைக்கு உரிமை காணப்படுவதற்கான ஆவணங்களை கண்டறிய முடியாததால் மோட்டர் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திடமிருந்து அறிக்கையொன்றை பெற்றுத் தருமாறு | இந்த வண்டிகள் சபையின் பெயரில் மோட்டர் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டள்ளதால் இது தொடர்பாக மேலதிக கவனம் செலுத்தி அவதானிக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டு இருக்கவில்லை. | | | | 2024 மார்ச் 07 திகதி கோரப்பட்டுள்ளதென. |
| மோடார் கார் வண்டி | - | 05 | 05 | |
| மோடார் லொறி வண்டி | - | 01 | 01 | |
| தனி கெப் வண்டி | - | 01 | 01 | |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று ஆளணியினரில் 04 விற்பனை முகவர்கள் தவிர ஏனைய 91 மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் SMS மூலம் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்யும் 03 விற்பனை முகவர்களிற்கு ரூபா 166,615,583 ஆன பெசிவ் லொத்தர் சீட்டுக்களை கடனிற்கு விற்பனை செய்திருந்த போதும், அவற்றில் 48 கடன்படுனர்கள் இடமிருந்து மாத்திரம் ரூபா 59,525,000 ஆன வங்கி பிணைமுறி பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆளணியினரில் விற்பனை முகவர்கள் தவிர 46 மாவட்ட விற்பனை முகவர்களிடம் இருந்து வங்கி பிணைமுறி அல்லது வேறு போதுமான காப்பொன்றை பெற்றுக் கொள்ளாது லொத்தர் சீட்டுக்கள் கடனிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு இறுதியில் அந்த விற்பனை முகவர்கள் இடமிருந்து ரூபா 85,406,299 தொகை அறவிட வேண்டியதாக இருந்ததுடன் அவற்றில் 05 விற்பனை முகவர்களிடமிருந்து ஓராண்டை விஞ்சிய மீதி ரூபா 7,341,195 உம், 05 ஆண்டுகளை விஞ்சிய மீதி ரூபா 1,446,198 உமாக காணப்பட்டன. | தேசிய லொத்தர் சபையினால் போட்டிச் சந்தையினுள் விற்பனையை மேம்படுத்தும் நோக்கில் சீட்டிழுக்கும் லொத்தர் பத்திரங்களிற்காக விஷேட சீட்டிழுப்பு தடவைகளை செயற்படுத்துவதுடன் அங்கு வங்கி பிணைமுறிக்கு மேலதிகமாக மாவட்ட விற்பனை முகவர்களிற்கு கடன் அடிப்படையில் லொத்தர்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. வங்கி பிணைமுறிக்கு வழங்க முடியுமாவது அன்றாடம் சீட்டிழுப்பு தடவைகளிற்கு மாத்திரம் ஆவதால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது விஷேட சீட்டிழுப்பு தடவைகளை செயற்படுத்தும் போது வங்கி பிணைமுறிகளிற்கு மேலதிகமாக மாவட்ட விற்பனை முகவர்களிற்கு கடன் அடிப்படையில் லொத்தர்பத்திரங்கள் விநியோகிகப்படுகின்றன. | சபை கடனிற்கு விற்பனை செய்யும் லொத்தர்பத்திர விற்பனை பெறுமதி காப்புச் செய்யப்படும் வகையில் பாதுகாப்பு பிணைமுறி பெறப்பட வேண்டியதுடன் சபைக்கு அறவிட வேண்டிய நிதியை விரைவில் அறவிட செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 31 திகதியன்று ஆளணியினரில் 04 விற்பனை முகவர்கள் தவிர ஏனைய 75 மாவட்ட விற்பனை முகவர்களிற்கு ரூபா 59,043,386 ஆன உடனடி சீட்டுக்களை கடனிற்கு விற்பனை செய்திருந்த போதும் அவற்றில் 05 கடன்படுனர்கள் இடமிருந்து மாத்திரம் ரூபா 4,300,000 ஆன வங்கி பிணைமுறி பெறப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆளணியினரில் விற்பனை முகவர்கள் தவிர 70 மாவட்ட விற்பனை முகவர்களிடம் இருந்து வங்கி பிணைமுறி அல்லது வேறு போதுமான காப்பொன்றை பெற்றுக் கொள்ளாது லொத்தர் சீட்டுக்கள் கடனிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன. மீளாய்வாண்டு திசெம்பர் 31 அந்த விற்பனை முகவர்கள் இடமிருந்து ரூபா 54,875,636 தொகை அறவிட வேண்டியதாக இருந்ததுடன் 17 விற்பனை முகவர்களிடமிருந்து ஓராண்டை விஞ்சிய அறவிட வேண்டிய மீதி ரூபா 7,917,747 ஆகக் காணப்பட்டது. | 2023 திசெம்பர் 31 திகதியன்று அறவிட வேண்டிய கடன் தொகையிலிருந்து தற்போது ரூபா 39,180,912 தொகை செலுத்தி முடிவுறுத்தப்பட்டுள்ளது. | சபை கடனிற்கு விற்பனை செய்யும் லொத்தர்பத்திர விற்பனை பெறுமதி காப்புச் செய்யப்படும் வகையில் பாதுகாப்பு பிணைமுறி பெறப்பட வேண்டியதுடன் சபைக்கு அறவிட வேண்டிய நிதியை விரைவில் அறவிட செயற்பட வேண்டும். |
| (இ) | பெசிவ் மற்றும் உடனடி லொத்தர்களிற்காக வங்கி பிணைமுறி வழங்க வேண்டிய 34 விற்பனை முகவர்களிற்கு அதன் வங்கி பிணைமுறி பெறுமதியை விஞ்சி கடனிற்கு விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதியன்று அந்த லொத்தர் கடன்படுனர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை அவர்களினால் வழங்கி இருந்த பிணைமுறை பெறுமதியை விஞ்சி ரூபா 37,604,678 வரை அதிகரித்திருந்தது. | 2024 மார்ச் 31 திகதியன்று மேலும் தீர்க்க வேண்டியுள்ள தொகை ரூபா 1,311,711 ஆகும். அது 2023 ஆண்டிற்குரிய விஷேட சீட்டிழுப்பு தடவைகளிற்காக இலவசமாக லொத்தர் பத்திர மேம்படுத்தும் நிகழ்சித் திட்டம் (Free Issue) மற்றும் பாவனையாளர் ஊக்குவிப்பு நிகழ்சித் திட்டத்தின் கீழ் தீர்க்க வேண்டியதாக காணப்படும் பெறுமதியாவதுடன் குறித்த தீர்ப்பனவு நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. | கடனிற்கு விற்பனை செய்யும் லொத்தர்பத்திர பெறுமதி காப்புச் செய்யப்படும் வகையில் பாதுகாப்பு பிணைமுறி பெறப்பட வேண்டியதுடன்,பணம் செலுத்தாத கடன்படுனர்களிடம் இருந்து அறவிட வேண்டிய நிதியை,வங்கி பிணைமுறி மூலம்பெற்றுக் கொள்ள செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | சபையில் கடமையாற்றிய 5 அலுவலர்களிற்கு வழங்கியிருந்த இடர் கடன் தொகையிலிருந்து கூட்டுத் தொகை ரூபா 713,393 ஆன கடன் மீதிகள் 2012, 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளிலிருந்து மீள் செலுத்துதலை குறித்த அலுவலர்கள் புறிக்கனித்திருந்த போதும், அந்த அறவிட வேண்டிய கடன் மீதியை 2023 திசெம்பர் 31 வரை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | எதிர்காலத்தில் அறவிட தேவையான நடவடிக்கை எடுப்பதென. | தாமதமின்றி அறவிட வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | சபையில் கடமையாற்றிய இரண்டு அலுவலர்களிற்கு வழங்கியிருந்த வீடமைப்புக் கடன் தொகையிலிருந்து கூட்டுத் தொகை ரூபா 1,519,920 ஆன கடன் மீதிகள் 2006 ஆண்டு முதல் மற்றும் 2016 ஆண்டு முதல் மீள் செலுத்துதலை குறித்த அலுவலர்கள் புறக்கனித்திருந்த போதும், 2023 திசெம்பர் 31 வரை அந்த அறவிட வேண்டியகடன் தொகையை அறவிட சபைக்கு இயலாதிருந்தது. | இரண்டு அலுவலர்களிற்கு வழங்கியிருந்த வீடமைப்புக் கடன் தொகையை செலுத்துதலை அவர்கள் புறக்கனித்திருந்த பின்னர் சபைக்கு அறவிட வேண்டியதாக காணப்படும் மீதியை அறவிட தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி அறவிட வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 10(5) பிரிவு மற்றும் 1997 இன் 35 இலக்க நிதி (திருத்த) சட்டத்தால் திருத்திய 1963 இன் 11 இலக்க நிதி சட்டத்தின் 17(2) பிரிவு | லொத்தர் வருமானத்தில் இருந்து சட்டத்தில் நிச்சயித்து குறிப்பிட்டுள்ள செலவுகளை கழித்த பின்னர் மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய போதும், மீளாய்வாண்டு இறுதியில் நிறுத்தி வைத்த இலாபத்தின் கூட்டுத் தொகை ரூபா 3,603,093,604 தொகை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காது, 2023 திசெம்பர் 31 திகதி | மேற்குறித்த சட்ட ஏற்பாடுகளின் மூலம்லோத்தர் விற்பனையிலிருந்து கிடைக்கும் முழு இலாபத்தையும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வழங்கியுள்ள ஏற்பாட்டின் பிரகாரம் சென்று நிதி அமைச்சின் மூலம் ஆரம்பத்தில் கட்டளை விநியோகிக்கப்பட்டுள்ளது அதன் போது மஹஜன சம்பத மற்றும் வாசனா சம்பத லொத்தர் இரண்டு | குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரை சபையினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | மாத்திரம் காணப்பட்டதனால் ஆகும், அந்த லொத்தர் விற்பனையின் சதவீதமாக மாதாந்தம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்கே. அதன் போது லொத்தர் விற்பனையின் பின்னர் இலாபம் மீதியாக இருக்காததால் திரண்ட நிதியத்திற்கு நிதியை உருவாக்க தேசிய லொத்தர் சபை நிறுவப்பட்டுள்ளதாலும் திறைசேரி பிரதிச் செயலாளரினால் கட்டளை மீது அதன் பிரகாரம் லொத்தர் விற்பனையால் நேரடி பங்களிப்பொன்று திரண்ட நிதயத்திற்கு மேற்கொள்ளப்படுவதுடன் 2023 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக லொத்தர் விற்பனையால் நேரடி பங்களிப்பாக திரண்ட நிதயத்திற்கு செலவு வைக்கப்பட்ட தொகை ரூபா 3,841,947,982 ஆகும். | |
| (ஆ) | தேசிய லொத்தர் சபையின் 1963 இன் 11 இலக்க நிதிச் சட்டத்தின் 17(2) பிரிவு மற்றும் 1993 சனவரி 21 திகதிய இலக்கம் PE1/70/7/Vol1 கொண்ட திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதம் | அரசிற்காக நடாத்தப்படும் அனைத்து லொத்தர் வருமானத்திலிருந்தும் 16.5 சதவீதம் திரண்ட நிதியத்திற்கு அனுப்ப வேண்டிய போதும், மீளாய்வாண்டினுள் நடாத்தியிருந்த 11 லொத்தர்களிலிருந்து உரிய சதவீதத்திலும் குறைவாக, அதாவது 10 சதவீத பெறுமதி மாத்திரம் திரண்ட நிதியத்திற்கு அனுப்புவதால் மேலும் திறைசேரிக்கு அனுப்ப வேண்டிய பெறுமதி ரூபா 506,725,125 ஆகவிருந்தது. | 1993 சனவரி 21 திகதிய இலக்கம் PE1/70/7/Vol.II கொண்ட திறைசேரி பிரதிச் செயலாளரின் கடிதம் பிரகாரம் அதன் போது காணப்பட்ட மஹஜன சம்பத மற்றும் வாசனா சம்பத லொத்தர் வருமானத்தில் இருந்து 16.5 சதவீத பங்களிப்பு விகிதமொன்று திரண்ட நிதியத்திற்கு அனுப்பப்பட்டதுடன் அதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய அனைத்து லொத்தர் பத்திரங்கள் அந்த லொத்தர் பத்திர விற்பனை சந்தையில் நிலையாகும் வரை விற்பனை வருமானத்தில் | குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 10% விகிதமொன்று அரச திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொறு லொத்தர் வகையின் பிரகாரம் திரண்ட நிதியத்திற்கு மேற்கொள்ளும் பங்களிப்பு தொடர்பாக தேசிய லொத்தர் சபையின் விதிக்குள் உள்ளடக்கியுள்ளதுடன் அங்கீகார விதிகள் வர்த்தமானி மூலம் வெளியிட தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள்பபட்டுள்ளது. | |
| (இ) | 1963 இன் 11 இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)(ஒ) பிரிவின் (4) உப பிரிவு | சுபையினால் நடாத்திய அனைத்து தேசிய லொத்தர் பரிசு சீட்டிழுப்பிலும் அவ்வாறு பரிசு சீட்டிழுக்கப்படும் திகதி முதல் கணக்கிடப்படும் ஆறு மாதகாலம் கடந்த பின்னர் அந்த தேசிய லொத்தரின் ஏதேனும் பரிசிற்கு உரிமையுள்ள நபரை தேடிக் கொள்ள முடியாத போது வழங்கப்படாத ஒவ்வொறு பரிசும் அரசுடமையாக்கபட வேண்டியதுடன் அந்த பரிசின் பெறுமதி திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். எவ்வாறாயினும், 2023 சனவரி 01 முதல் ஜுன் 30 வரை 06 மாதங்களை கடந்த உரிமை கோரப்படாத விஷேட பணப் பரிசு மற்றும் பண்டப் பரிசின் கூட்டுத் தொகை ரூபா 21,671,746 மேற்குறித்த சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்காது சபை நிதியத்தினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | பரிசுத் தடவைகளிற்குரிய உரிமை கோரப்படாத 06 மாதங்களை கடந்த பண மற்றும் பண்டப் பரிசுகளின் கூட்டுத் தொகை ரூபா 21,671,746 வை பிரதான பரிசு அமைப்பிற்கு மாற்றமான விஷேட பரிசுகளாகும். அந்த விஷேட பரிசுத் தொகை அரசுடமை ஆக்கப்படாததுடன் அந்த பரிசிற்காக ஒதுக்கிய தொகையை குறித்த பரிசு தொகுதியிலேயே வைத்துக் கொள்வதுடன் பரிசாளர்கள் முன்வராத பண்டப் பரிசுகள் மீண்டும் எதிர்வரும் சீட்டிழுப்பு தடவைகளில் விஷேட பரிசாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த பரிசுகள் தொடர்பாக செயற்படும் விதம் சபையின் விதியிற்குள் உட்படுத்தப்பட்டுள்ளது. | குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | தேசிய லொத்தர் சபையின் 1963 இன் 11 இலக்க நிதிச் சட்டத்தின் 20 (3) (உப பிரிவு | சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் சபையினால் லொத்தர் நடாத்துவது தொடர்பாக நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சினால் அங்கீகரித்த விதிகள் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டிய போதும், சபையினால் 2016 மே 21 திகதி, 2018 மே 25 திகதி, 2022 சனவரி 27 திகதி மற்றும் 2023 ஜுலை 14 திகதி ஆரம்பிக்கப்பட் மெகா பவர், சொத்துப் புதையல், சாதகம் மற்றும் லக்கீ சவன் ஆகிய லொத்தர் பத்திரங்களிகாக பணிப்பாளர் சபை அங்கீகரித்த விதிகள் சட்டத்தில் பிரகாரம் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை. அவ்வாறே, சபையினால் 2010 பெப்ரவரி 28 முதல் 2023 ஜுலை 06 வரையான காலத்தினுள் பலவேறு நோக்கங்களிற்காக ஆரம்பிக்கப்பட்ட 06 வகை லொத்தர்களின் சீட்டிழுப்பு நடவடிக்கைகளை இரத்துச் செய்திருந்த போதும், அது தொடர்பாக வர்த்தமானியில் வெளியிட்டு பொது மக்களை அறிவூட்டி இருக்கவில்லை. | தற்போது வர்த்தமானியில் வெளியிட்டிருந்த விதிகள் முழுமையாக மாற்றமடைந்துள்ளதன் மீது தேசிய லொத்தர் சபையின் விதிகளை திருத்தி அதன் பிரகாரம் மும்மொழிகளிலும் திருத்திய விதிகளை வர்த்தமானியில் வெளியிடப்படவுள்ளன. | குறித்த சட்டத்தின் ஏற்பாடுகளை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தின் 11 பிரிவு | அரச சட்டவியல் கூட்டுத்தாபனத்தின் எந்த நிதியையும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்துடன் அல்லாது முதலீடு செய்யக் கூடாத போதும், சபையினால் மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 6,121,604,396 மற்றும் ரூபா 2,055,129,520 | தேசிய லொத்தர் சபையினால் முதலீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது அரச கூட்டுத்தாபனம் மற்றும் அரசுடமை நிறுவனங்ளிற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டிக் கோவையின் 6.2(v) பந்தி பிரகாரம் | 1971 இன் 38 இலக்க நிதிச் சட்டத்தினை பின்பற்ற வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | முறையே நிலையான வைப்புக்களில் மற்றும் காலரீதியான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | மற்றும் PED 02/2018 சுற்றறிக்கை பிரகாரம் மூன்றுபிரதான வங்கிகளில் ஆகும். இதற்காக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள 2023.08.21 திகதி கடிதமொன்றை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பிய போதும் இது வரை பதில் கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள மீண்டும் கடடிதமொன்றை நிதி மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டு அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஊ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 71 மற்றும் 2021 நவம்பர் 16 திகதிய இலக்கம் 01/2021 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மூலம் வெளியிடப்பட்டுள்ள செயற்பாட்டு கைநூலின் (Operational Menual) 3.2(i) ஏற்பாடுகள். | நியதிச்சட்ட சபைகள் உள்ளிட்ட அரசுடமை முயற்சிகளினால் (SOE) ஊழியர் பதவிகள் உள்ளிட்ட ஆட்சேர்ப்பு உத்தேச திட்டம் (SOR), சம்பள கட்டமைப்பு மற்றும் ஊழியர் படிகள் உள்ளிட்ட ஊழியர் எண்ணிக்கைகான கோரிக்கை பணிப்பாளர் சபை அங்கீகாரம் மற்றும் வரிசை அமைச்சின் பரிந்துரையுடன், பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் முகாமைத்துவ சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும், அவ்வாறாயினும், இந்த ஏற்பாடுகளிற்கு முரணாக சபையினால் பொது திறைசேரியின் முகாமைத்துவ | 2006 ஆண்டில் வெளியிடப்பட்ட இலக்கம் 30 முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை பிரகாரம் அரச கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபைகள் மற்றும் முழுமையாக அரசுடமை கம்பனிகளில் ஊழியர் சம்பள திருத்தத்தின் போது உயர் முகாமைத்துவ சம்பளத்தை விட அதற்கு கீழுள்ள சம்பள தொகுதிகளில் (Management Asistant/ Primary Level) சம்பள அளவுகளிற்கு இடையே பாரிய வித்தியாசம் காணப்பட்டமையால் இந்த ஊழியர்களிடம் இருந்து கிடைக்கும் பங்களிப்பு தொடர்பாக சில விஷேடத்துவத்தை மேற்கொண்டு நிலவிய பொருளாதாரத்திற்கு பொருந்தும் வகையில் உயர் சம்பளத்தை வழங்க 05 சம்பள ஏற்றங்களை அல்லது அதிலும் கூடிய அளவை வழங்க அங்கீகாரத்தை | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | திணைக்களத்தின் முன்கூட்டிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாது, பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது மாத்திரம் சபையின் அலுவலர்களிற்கு பின்வரும் சம்பளம் மற்றும் படிகளை செலுத்தியிருந்தது.<br>• சபையில் கடமையாற்றும் 341 அலுவலர்களிற்கு 2023 ஒக்டோபர் மாதம் முதல் முன்நோக்கி 06 சம்பள ஏற்றங்கள் வீதம் வழங்கியிருந்ததுடன், 2023 நிதியாண்டிற்கு உரியதாக மாத்திரம் அந்த செலவினம் ரூபா 3,107,820 ஆகும்.<br><br>• சபையில் கடமையாற்றும் அனைத்து அலுவலர்களிற்கும் 2023 ஆண்டில் மாத்திரம் கடமை படிகள், அபாய படிகள், சீருடை படிகள், உற்பத்திப் படிகள், கருணை படிகள், இலக்கு வைக்கப்பட்ட ஊழியர் **நாட்ட** நலன்கள், வேன் வண்டிகளில் விற்பனையின் மீது கடமை படிகள் மற்றும் ஊழியர்களிற்கு பணப் பரிசில்களாக கூட்டுத் தொகை ரூபா 205,608,174 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | கோரி 2008 ஆண்டில் பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த சம்பள திருத்தத்தில் ஏற்பட்டுள்ள சம்பள அளவுகளிற்கிடையிலான வித்தியாசத்தை தீர்ப்பதற்காக கீழ் சம்பள தொகுதிகளின் ஊழியர்களிற்கு 05 சம்பள ஏற்றங்களை வழங்க பணிப்பாளர் சபை அங்கீகாத்தை வழங்கியுள்ளது.<br><br>பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. | |
| (எ) | 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 15(2) மற்றும் (3) பந்திகள் | சபையினால் 1998 ஆண்டில் அபயமற்றோருக்கு அபயம் எனும் பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்திருந்தது. அந்த நிதியத்திற்கு | தேசிய லொத்தர் சபைக்கு இவ்வாறான நிதியமொன்றை பேணிச் செல்ல முடியாதென குறிப்பிட்டு அனுப்பப்பட்ட கணக்காய்வ ஐயவினா மற்றும் 2022 திசெம்பர் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | லொத்தர் பரிசாளர்களின் பங்களிப்பினால் மற்றும் லொத்தர் விற்பனை வருமானத்தில் 0.005 சதவீத அளவு பெறுவனவாக செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், 2023 திசெம்பர் 31 திகதி வரை அந்த நிதியத்தின் மீது ரூபா 21,951,248 ஆகவிருந்தது. இவ்வாறு விஷேட நிதியத்தை பேணிச் செல்ல சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் அங்கீகாரத்தை பெற்றிருக்காததுடன் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டிய நிதி சட்ட ரீதியற்ற வகையில் சபையிடம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 13 திகதி நிதி அமைச்சின் வளவில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்திலும் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் குறித்த நிதியத்தை பயன்படுத்தி முடிவுறுத்த 2023 மே 08 திகதி இடம்பெற்ற 3854 இலக்க பணிப்பபாளர் சபை பத்திரத்தின் கீழ் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம்,அபயமற்றோருக்கு அபயம் நிதியத்தை பயன்படுத்த நிதியத்தின் நோக்கத்தின் பிரகாரம் சென்று அபயமற்ற தரப்பினரிற்காக நலன்புரி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியதுடன் அந்த செயற்பாடுகளின் இறுதி கொடுப்பனவு இவ்வாண்டு நடுப் பகுதியளவில் முடிவுறுத்தி நிதியம் மூடிவிடப்படவுள்ளது. | |
| (ஏ) | 2015 மே 25 திகதிய இலக்கம் PED 2/2015 மற்றும் 2022 சனவரி 18 திகதிய இலக்கம் PED 2/2022 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி | கையடக்க தொலைபேசி கொள்வனவு செலவினை குறித்த அலுவலர் தனிப்பட்ட முறையில் ஏற்க வேண்டியதுடன், அதற்காக சபையினால் செலவிடக் கூடாது. எவ்வாறாயினும், அதற்கு முரணாக 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டிறுதி வரை 22 அலுவலர்களிற்கு 24 கையடக்க தொலைபேசிகளை வழங்க ரூபா 2,319,493 செலவிடப்பட்டிருந்தது. மேலும் 4633 மஹஜன சம்பத சீட்டிழுப்பின் மேலதிக பரிசாக வழங்க இருந்த ரூபா 510,000 ஆன கையாடக்க தொலைபேசியை | தேசிய லொத்தர் சபையில் நிலவும் கடமை சூழலினுள் வியாபார நடவடிக்கைகளை பேணிச் செல்வதற்காக பதவிநிலை அலுவலர்களான உதவி ஆணையாளர் மற்றும் அதற்கு மேல் மட்ட அலுவலர்களின் பங்களிப்பு எல்லா நேரங்களிலும் அத்தியவசியமாகும். கடமை நாட்களில் போன்றே விடுமுறை நாட்களிலும் கையடக்க தொலைபேசி பயன்பாட்டினால் கடமை நடவடிக்கைகளை செயற்படுத்த நேரிட்டுள்ளது. நிறுவனம் ஆண்டில் 360 நாட்களிற்கு கிட்டிய நாட்கள் | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெற்றி பெற்ற பரிசாளர் முன்வராததால் அந்த தொலைபேசியை தேசிய லொத்தர் சபையின் அலுவலர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. | எண்ணிக்கையில் தொடர்ந்து திறந்திருப்பதால் இந்த அலுவலர்கள் நிதமும் கடமையில் நிலைத்திருக்க வேண்டியுள்ளது. அதனால் இந்த அலுவலர்களிற்கு தொலைபேசி வசதிகளை வழங்குவது நிறுவனத்தின் பொறுப்பாவதால் பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது நிபந்தனைகளின் கீழ் கையடக்க தொலைபேசி வழங்கப்படுகின்றது. | |
| (ஐ) | 2019 திசெம்பர் 17 திகதிய இலக்கம் 08/2019 கொண்ட பொது நிதி திணைக்களத்தின் சுற்றறிக்கை | 2019 ஆண்டு முதல் அரச கூட்டுத்தாபனம் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் www.promise.lk இணையத்தின் கீழ் அறிமுகம் செய்துள்ள மின் அரச பெறுகைகள் முறைமையின் (e - GP) கீழ் பதிவு செய்ய வேண்டிய போதும், தேசிய லொத்தர் சபையினால் மீளாய்வாண்டு இறுதி வரை அந்த முறைமையின் கீழ் பெறுகைகள் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை. | www.promise.lk இணையத்தின் கீழ் அறிமுகம் செய்துள்ள மின் அரச பெறுகைகள் முறைமையின் (e - GP) கீழ் இலக்கம் P000381 இல் தேசிய லொத்தர் சபை பதிவு செய்துள்ளது. மின் அரச பெறுகைகள் முறைமையின் (e - GP) கீழ் எதிர்வரும் பெறுகைகள் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான அறிவுறைகளை நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் மூலம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்த பின்னர் அதன் ஊடாக மேற்கொள்ள முடியுமான எதிர்வரும் பெறுகைகள் நடவடிக்கைகளை மின் அரச பெறுகைகள் முறைமையினை (E - GP) பின்பற்றி மேற்கொள்ள எதிர்பார்க்கிறேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஒ) | 2015 மே 25 திகதிய இலக்கம் PED 1/2015 கொண்ட பொது | உத்தியோக வாகன உரித்தற்ற இடைநிலை முகாமையாளர்களிற்கு | பொது முயற்சிகள் சுற்றறிக்கை 1/2015 பிரகாரம் சென்று அந்த | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| முயற்சிகள் சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தி | வழங்க இயலுமாவது குழு போக்குவரத்து வசதிகளை மாத்திரமே. 2023 ஆகஸ்ட் 17 திகதி சபைக்கு அனுப்பியிருந்த இலக்கம் PED/S/NLB/04/06(i) கொண்டபொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலமும் உதவி பொது முகாமையாளர்களிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் போது அவர்கள் உரித்தாகும் இடைநிலை முகாமைத்துவ குழுவிற்குரிய மேற்குறித்த சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிட்டு இருக்கையில் அதற்கு முரணாக சபை பின்வருமாறு செயற்பட்டிருந்தது.<br><br>• 2024 சனவரி முதல் 09 இடைநிலை முகாமையாளர்கள் HM 1-1 குழுவில் சேர்ந்தவர்களாக கருதி உத்தியோக வாகன உரித்துடையவர்களிற்கு எரிபொருள் மற்றும் போக்குவரத்து படிகளை செலுத்த 2023 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 3864-11 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டு இருந்தது. அதன் பிரகாரம், 2024 சனவரி முதல் 07 இடைநிலை முகாமையாளர்களிற்கு சபை வாகனமொன்று மற்றும் சாராதி ஒருவர் வீதம் ஒதுக்கி மாதாந்தம் 115 லீற்றர் | சுற்றறிக்கையின் கீழ் நிலை அலுவலர் மட்டமான 2.3 குழுவின் அலுவலரின் கீழ் இடைநிலை முகாமைத்துவ மட்ட உதவி ஆணையாளர்களை உள்ளடக்கி அச் சுற்றறிக்கை பிரகாரம் அவர்களிற்கு ஏற்பாடு 2024 சனவரி 01 திகதி முதல் வழங்க 2023 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 3864 – 11 கொண்ட பணிப்பாளர் சபை பத்திரம் மூலம் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அவ்வாறே பொது முயற்சிகள் திணைக்களத்தின் கடிதம் பிரகாரம் உதவி ஆணையாளர்களின் கடமை பணிகளிற்காக தொகுதி வாகனங்களை பயன்படுத்தும் இயலுமை காணப்பட்டு இருப்பின் அந்த வாகனங்களை பயன்படுத்த முடியுமெனவும், கடமை நடவடிக்கைகளிற்காக குழுப் போக்குவரத்து சேவையை பயன்படுத்துதல் நடைமுறை சாத்தியம் அற்ற மற்றும் செலவு கூடுதலாக இருப்பின், கடமை பயணங்களிற்காக செலவாகும் உண்மையாக பயணித்திற்கு செலவாகும் உண்மையான பயணப் படிகளை மீள்நிரப்புவது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தின் எதிர்ப்பு இல்லையென பொது முயற்சிகள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் 2024 ஏப்ரல் 18 திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| வீதம் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டு இருந்ததுடன், மேலும் இரண்டு அலுவலர்களிற்கு தமது தனிப்பட்ட வாகனத்தை கடமைக்காக பயன்படுத்த இடமளித்து அதற்காக மாதாந்தம் ரூபா 50,000 போக்குவரத்து படிகளுடன் 115 லீற்றர் வீதம் எரிபொருள் படிகள் வழங்கப்பட்டு இருந்தது. | |
| • எரிபொருள் படிகள் உரித்தற்ற கீழ் நிலை முகாமையாளர்குள் (JM 1-1) 21 பேர்களுக்கு 2023 சனவரி முதல் திசெம்பர் வரை 110 லீற்றர் வீதம் மாதாந்தம் எரிபொருள் படிகள் மீள்நிரப்பப்பட்டு இருந்ததுடன் ரூபா 35,000 போக்கு வரத்து படிகள் செலுத்தப்பட்டு இருந்தது. அவ்வாறே முகாமைத்துவ உதவியாளர் (MA 1-2) 15 அலுவலர்களிற்கு 25 லீற்றர் வீதம் மாதாந்தம் எரிபொருள் படிகள் மீள்நிரப்பப்பட்டு இருந்ததுடன்,ரூபா 6,000 வீதம் போக்கு வரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் மாத்திரம் இந்த அலுவலர்களிற்கு ரூபா 20,757,669 எரிபொருள் படிகள் மற்றும் போக்கு வரத்து படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | 2011 ஆண்டு முதல் கள அலுவளர் பதவிகள் முறையாக ஏற்படுத்தப்பட்டது. அந்த பதவிகள் மூலம் கள கடமைகளை மேற்கொள்ள அவர்களிற்கு அதன் போது பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது வாகன மற்றும் எரிபொருளை பயன்படுத்த அங்கீகாரம் வழங்கி கடமை ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஓ) | 2022 ஆகஸ்ட் 08 இன் PED 04/2022 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.8 ஆம் பந்தி | அரச நிறுவனங்களில் ஆண்டு விழா செயற்பாடுகளிற்குரிய அனைத்து செலவுகளையும் கைவிட வேண்டிய போதும், மீளாய்வாண்டில் சபையின் 60 ஆம் ஆண்டு விழாவிற்காக கூட்டுத் தொகை ரூபா 37,685,576 செலவிடப்பட்டிருந்தது. | 2023 ஆண்டு தேசிய லொத்தர் சபைக்கு 60 ஆண்டுகள் பூர்த்தியாவதன் பொருட்டு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்காக பங்களிப்பை வழங்கும் ஆளணியினரை ஊக்குவிக்கும் முகமாக ஒரு அலுவலரிற்காக ரூபா 60,000 வீதம் சிறப்பங்காடி வவுசர் மற்றும் சபையில் கடமையில் ஈடுபட்டுள்ள அனைத்து அலுவலர்களிற்கும் 06 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டன. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (க) | நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் 2022 ஆகஸ்ட் 08 திகதிய இலக்கம் 04/2022 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.7 ஆம் பந்தி | அனைத்து வகையான அனுசரணை, அன்பளிப்பு, நிறுவனத்தின் சமுதாய பொறுப்பு (CSR) செலவு மற்றும் வியாபாரமல்லாத மேம்பாட்டு செலவுகளை நிறுத்துமாறும், இயற்கையாக வரும் அவ்வாறான எந்தவொறு செலவையும் குறித்த அமைச்சரின் மற்றும் நிதி அமைச்சரின் அங்கீகாரத்தின் மீது மாத்திரம் செலவிட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதும், சபையினால் மீளாய்வாண்டில் நிறுவனத்தின் சமுதாய பொறுப்பு (CSR) செலவின் கீழ் ரூபா 4,655,000 ஆன செலவினை குறித்த அங்கீகாரமின்றி செய்திருந்தது. | 2023 ஆண்டிற்குரியதாக ரூபா 4,655,000 ஆன செலவு கூட்டு சமுதாயப் பொறுப்பு செலவின தலைப்பின் கீழ் (CSR) சபையினால் மேற்கொண்டுள்ளதுடன் அந்த செலவு அனைத்து அனுசரணை பங்களிப்புக்கள் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் பொது முயற்சிக் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (கா) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2006 | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | 4.2.1 (ஆ) மற்றும் (இ) பிரிவுகள் | எதிர்வரும் ஆண்டின் பெறுகைகள் நடவடிக்கைகளை விரிவாக குறிப்பிட்டு குறைந்த பட்சம் 03 ஆண்டு காலத்திற்கு எதிர்பார்க்கும் பெறுகைகள் நடவடிக்கைகள் உள்ளடக்கி பிரதான பெறுகைகள் திட்டமொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதும், கணக்காய்விற்கு உட்படுத்திய 2019 முதல் 2023 வரை சபையின் லொத்தர் பத்திரம் அச்சிடல், வழங்கல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைப்பதற்குரிய பெறுகைகள் நடவடிக்கைகள் உள்ளிட்ட விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | இது வரை பெறுகைகள் திட்டத்தை 03 ஆண்டுகளிற்கு தயாரிக்காததால் எதிர்காலத்தில் தயாரிக்க குறித்துக் கொள்ளப்பட்டது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |
| (ii) | 4.4 மற்றும் பெறுகைகள் கைநூலின் 4 ஆம் அத்தியாயம் | மீளாய்வாண்டில் மேற்கொள்ள எதிர்பார்த்திருந்த ரூபா 127,350,000 ஆன மென் பொருட்கள் கொள்வனவு ஒன்றை 09 பெறுகைகள் சந்தர்ப்பங்களின் கீழ் பிரித்து திணைக்கள பெறுகைகள் குழு அதிகாரத்தின் கீழ் கொள்வனவு செய்ய பெறுகைகள் திட்டத்திற்கு உட்படுத்தப்பட்டு இருந்தது. | தகவல் தொழிநுட்ப பிரிவினால் குறித்த மென் பொருட்களை கொள்வனவு செய்தலை உருப்படி வாறியாக சமர்ப்பித்துள்ளதுடன் அதன் பிரகாரம் பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் சென்று குறித்த உருப்படிகளை கொள்வனவு செய்தல் திணைக்கள பெறுகைகள் குழு அதிகாரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்ற வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

## 2.1 நிதி விளைவுகள்

சபையின் மீளாய்வாண்டுமொத்த வருமானம்ரூபா 32,014,201,280 ஆனதுடன், கடந்த ஆண்டு வருமானம்ரூபா 21,208,808,240 ஆனது. அதன் பிரகாரம் சபையின் வருமானம் கடந்த ஆண்டிற்கு ரூபா 10,805,393,040 இனால் அதாவது 51 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 650,877,152 ஆனதுடன் முன்னைய ஆண்டின் அந்த இலாபம் ரூபா 1,085,769,648 ஆனதில் வரிக்கு பின்னரான இலாபம் ரூபா 434,892,496 இனால் அதாவது 40 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டு சபையின் வருமானம் அதிகரித்திருக்கையில் இலாப குறைவடைய பிரதான செலவுக் குழுவான பரிந்தளிப்பு செலவுகள், நிர்வாக செலவுகள் மற்றும் நிதி மற்றும் ஏனைய செலவுகள் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக அதிகரித்தல் முக்கியமான காரணமாக இருந்தது.

## 2.2 முக்கிய வருமானம் மற்றும் செலவின விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

சபையின் 2023 ஆண்டில் மற்றும் 2022 ஆண்டில் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோகம் செலவினம், நிர்வாக செலவினம் மற்றும் நிதி மற்றும் ஏனைய செலவினக் குழுக்களிற்குரிய செலவுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| விபரம் | ஆண்டு | | வித்தியாசம் | வித்தியாச சதவீதம் |
|---|---|---|---|---|
| | 2023<br>ரூபா | 2022<br>ரூபா | ரூபா | % |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக செலவினம் | 1,408,116,521 | 920,609,013 | 487,507,508 | 53 |
| நிர்வாக செலவினம் | 1,056,920,215 | 839,811,722 | 217,108,493 | 26 |
| நிதி மற்றும் ஏனைய செலவினம் | 37,304,827 | 5,863,160 | 31,441,667 | 536 |

கடந்த ஆண்டுன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக செலவினம்53 சதவீதத்தாலும்,நிர்வாக செலவினம் 26 சதவீதத்தாலும்,நிதி மற்றும் ஏனைய செலவினம் 536 சதவீதத்தாலும் அதிகரித்திருந்தது.

## 2.3 வீகிதப் பகுப்பாய்வு

| | வீகிதம் | ஆண்டு | |
|---|---|---|---|
| | | 2023 | 2022 |
| (i) | மொத்த இலாப விகிதம் (நூற்றுக்கு) | 6.3 | 9 |
| (ii) | தேறிய இலாப விகிதம் (நூற்றுக்கு) | 2.03 | 5.12 |
| (iii) | நடைமுறை சொத்து விகிதம் (தடவை எண்ணிக்கை) | 2.44:1 | 2.7:1 |
| (iv) | விரைவு சொத்து விகிதம் (தடவை எண்ணிக்கை) | 2.42:1 | 2.7:1 |

சபையின் நடைமுறை ஆண்டின்மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்கள் முறையே 6.3 சதவீதம் மற்றும் 2.03 சதவீதமானதுடன், கடந்த ஆண்டின் அந்த விகிதங்கள்முறையே 9 சதவீதம் மற்றும் 5.12 சதவீதமானது. அதன் பிரகாரம்,நடைமுறை ஆண்டின் மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்கள் கடந்த ஆண்டிற்கு ஒப்பாக 2.7 சதவீதத்தால் மற்றும் 3.09 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. அதன் பிரகாரம் சபையின் செயற்பாட் நடவடிக்கைகளில் செயலாற்றுகை குறைவடைந்துள்ளதாக அவதானிக்கப்படுகிறது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையிற்கு 2016/2017 மற்றும் 2017/2018 மதிப்பீடு ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் முறையே ரூபா 1,450,773,080 மற்றும்ரூபா 1,232,783,401 தண்டப் பணத்துடன் செலுத்த வேண்டிய வருமான வரியொன்று மதிப்பிடப்பட்டிருந்தது. சபை அதற்காக முன்வைத்திருந்த மேன்முறையீட்டிற்காக முறையே ரூபா 335,994,244 மற்றும்ரூபா 308,195,850 ஆன வங்கி பிணைமுறி வழங்க நேரிட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியில் அற்காக முறையே வங்கி வட்டி ரூபா 12,326,250 மற்றும் ரூபா 3,852,448 செலவிடப்பட்டிருந்தது.எவ்வாறாயினும்,மேன்முறையீட்டை முன்வைத்து 02 ஆண்டுகள் கடந்துள்ள போதும் சபைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அந்த வருமான வரி பிரச்சினை இன்னும் தீர்க்கப்படாததுடன் அந்த மேன்முறையீட்டிற்காக வழங்கியுள்ள வங்கி பிணைமுறிக்காக மேலும்அவசியமற்றவாறு வட்டி செலுத்த நேரிட்டுள்ளது. | வருமான வரி மதிப்பீட்டுடன் சபை இணங்காததால் நிறுவனத்தினால் அனுப்பப்பட்ட வரி மேன்முறையீடு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் மட்டத்திலும் தீர்த்துக் கொள்ள முடியாததால்உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் தீர்மானத்திற்கு எதிராக ஆணைக்குழுவிற்கு உரியவாறு முன்வைக்கப்பட்டது. இந்த வரி மேன்முறையீட்டை வழங்கும் போது வங்கி பிணைமுறை வழங்குவது கட்டாயம் என்பதுடன் அதற்காக அரச வங்கிகளில் இருந்து விலைகளை கோரி நிறுவனத்திற்கு சாதகமான குறைந்த வங்கிக் கட்டணம் அறவிடும் வங்கியிடமிருந்து பிணைமுறி வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஆணைக்குழுவினால் குறித்த புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் தீர்ப்பை வழங்க எடுக்கம் காலம் தொடர்பாக எங்களால் தலையிட முடியாது என அறிவிக்கிறோம். | வருமான வரி மதிப்பீட்டிற்கு தாக்கம் செலுத்திய விடயங்கள் தொடர்பாக சபை, நிதி அமைச்சு மற்றும் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு இடையில் உடன்பாட்டை விரைவில் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். |

### 3.2 இனங்கண்ட நட்டங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2023 திசெம்பர் 28 திகதி சீட்டிழுக்கப்பட்ட ஒன்று ரூபா 100 ஆன மெகா 60 விஷேட லொத்தர் வெற்றித் தடவையில் மற்றும்2023 திசெம்பர் 30 திகதி சீட்டிழுக்கப்பட்ட ஒன்று ரூபா 1,000 ஆன மெகா மில்லியன் விஷேட லொத்தர் வெற்றித் தடவையில் முறையே ரூபா 143,253,000 மற்றும்ரூபா 143,193,000 ஆன விற்பனை வருமானத்தை ஈட்டியிருந்த போதும், அந்த இரண்டு லொத்தர்களிற்குமான அரசின் பங்களிப்பு, முகவர் தரகு, பரிசில் கிரயம், அச்சிடும் செலவு மற்றும் போக்கு வரத்து செலவு | முன்மாதிரி கருத்திட்டமாக இந்த விஷேட லொத்தர் பத்திரத்தை சந்தையில் வெளியிட்டு அரசிற்கு வருமானத்தை அதிகரிக்கவும் தற்போது லொத்தரை கொள்வனவு செய்ய ஊக்கமில்லாத உயர் வருமான குழுவை கூடிய விலையுடனான லொத்தரை கொள்வனவு செய்வதற்காக ஊக்கப்படுத்தல் மற்றும் அவர்களின் நாட்டத்தை மேற்கொள்ளவும் இதனூடாக | சரியான வழிகாட்டல் பிரகாரம் விஷேட வெற்றித் தடவைகளை நடாத்த செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளிட்ட மேம்படுத்தல் செலவுகளிற்காக ரூபா 201,225,240 மற்றும் ரூபா 188,089,073 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், மெகா 60 விஷேட லொத்தர் வெற்றித் தடவையின் எதிர்பார்த்த சீட்டு விற்பனை 2,422,371 அளவில் 1,432,530 சீட்டுக்கள் அதாவது 59.14 சதவீத்தை மாத்திரமே விற்பனை செய்ய முடியுமாக இருந்ததுடன் மெகா மில்லியன் விஷேட லொத்தர் வெற்றித் தடவையின்எதிர்பார்த்த 300,000 சீட்டுக்கள் விற்பனையில் 143,193 சீட்டுக்கள் அதாவது 47.73 சதவீதத்தை மாத்திரமே விற்பனை செய்ய முடியுமாக இருந்தது. இதன் பிரகாரம் சபைக்கு இந்த இரண்டு லொத்தர்களினதும் எதர்பார்த்த இலக்கை அடைந்து கொள்ள முடியாததால் முறையே ரூபா 57,972,240 மற்றும் ரூபா 44,896,073 ஆன நட்டத்தை அடைந்திருந்தது. | மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், அந்த நோக்கத்தை அடைந்து கொள்ள எதிர்பார்த்த சிறந்த மட்டத்தில் இடம்பெறாத போதும், அடுத்த பரிசில் வெற்றித் தடவைகளில் கூடிய விற்பனையை அடைந்து கொள்ள நவீன தொழிநுட்பத்துடன் விற்பனை மேம்படுத்தல் நிகழ்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் தேவைப்பாடு அதற்காக காணப்படும் இடம்பாடு அதனூடாக கூடிய விற்பனையை பெற்றுக் கொள்ளும் இயலுமை இனங்காணப்பட்டது. | |
| (ஆ) | சபையின் அலுவலர் ஒருவரினால் 2020 செப்டம்பர் 10 ஆம் திகதி முதல் 2020 திசெம்பர் 26 திகதி வரை 23 சந்தர்ப்பங்களில் லொத்தர் வருமானமாக கிடைத்த கூட்டுத் தொகை ரூபா 4,736,005 வை வங்கியில் வைப்பிலிடாது காசுப் புத்தகத்தில் பெறுவனவாக போலியான குறிப்பிட்டு அத்தொகையை மோசடி செய்திருந்தார். எவ்வாறாயினும், அந்த மோசடி செய்த தொகையை இது வரை சபைக்கு அறவிட முடியாதுள்ளதுடன் அந்த நிதி மோசடி செய்த அலுவலரிற்கு எதிராக குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்வதனை தவிர முன்னேற்றத்தை அடைந்து கொண்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நிறுவன ரீதியாக ஆரம்ப புலனாய்வு செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே இது தொடர்பாக தெரிந்து கொண்ட உடனே குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்துள்ளதுடன் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் நீதிமன்ற கட்டளையை பெற்று சர்வதேச பொலிஸிற்கும் அறிவித்துள்ளது. | சபையின் உள்ளக கட்டுப்பாட்டை முறைமையை வலுவூட்டி நிதி மோசடி செய்வதற்கு காணப்படும் சந்தர்ப்பங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். |
| (இ) | சபையினால் சீட்டிழுப்பிற்காக தினந்தோறும் அச்சிடும் லொத்தர் பத்திரங்களில் பாரிய அளவொன்று விற்பனை செய்யப்படாது காணப்படுவதுடன், 2023 திசெம்பர் மாதத்தில் 81,142,371 சீட்டுக்கள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அவற்றில் | திசெம்பர் மாதத்தில் நாடு முழுவதும் சீரற்ற காலநிலை நிலவியதுடன் விஷேடமாக தென் பகுதியில் அதிக சீரற்ற தொடர்ந்து வெள்ள நிலைமையின் மீது | தினந்தோறும் விற்பனையாகும் லொத்தர் சீட்டுக்கள் அளவு தொடர்பாக சரியான மதிப்பீட்டை தயாரித்து லொத்தர் சீட்டுக்களை அச்சிட |

| | | |
|---|---|---|
| 1,664,296 சீட்டுக்கள் களஞ்யத்தில் எஞ்சியிருந்ததுடன் மேலும் 10,529,100 சீட்டுக்கள் விற்பனை செய்ய முடியாது விற்பனை முகவர்களினால் திருப்பி சபைக்கு அனுப்பப்பட்டு இருந்தன. அதன் பிரகாரம் திசெம்பர் மாதத்தில் மாத்திரம் அச்சிட்ட சீட்டுக்களில் 15.03 சதவீதம் அவ்வாறு விற்பனை செய்யப்படாது எஞ்சியிருந்தது. இதன் பிரகாரம் 2023 திசெம்பர் மாதத்தில் மாத்திரம் அச்சிட்ட 12,193,396 சீட்டுக்கள் விற்கப்பட முடியாததால் அன்னளவாக ரூபா 697,661,020 மில்லியனான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த விற்கப்படாத சீட்டுக்களை அச்சிடுவதற்காக ரூபா 14,066,175 செலவிடப் பட்டுள்ளதுடன் அந்த செலவு சிக்கனமற்ற செலவாகியுள்ளது. | விற்பனை வேகமாக வீழ்ச்சியடைந்து உள்ளதுடன் அவ்வாறான பின்னனியில் ஒரு நாளில் காலாவதியாகும் லொத்தர் சீட்டுக்கள் மீள் அனுப்பும் கட்டுப்பாடு பௌதீக ரீதியாக கடினமாக செயலாகும். அதன் பிரகாரம் அரசின் பங்களிப்பை அதிகரிக்க விற்பனை வருமானத்தை அதிகரிக்க விற்பனைக்கு காணப்படும் சந்தர்ப்பத்தின் மீது லொத்தர்களை அச்சிடுவது விளைவற்ற செலவல்ல என அறிவிக்கிறேன். | வேண்டும். |

## 3.3 முகாமைத்துவசெயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1963 இன் 11 இலக்க நிதிச் சட்டத்தின் மூலம் தேசிய லொத்தர் சபை இஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் அச் சட்டத்தின் சில பிரிவுகள் 1997 மற்றும் 1998 ஆண்டுகளில் திருத்தப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தற்போது சபையின் நோக்கங்களுடன் இணங்கும் வகையில் புதிய சட்டமொன்றை நகழ் செய்ய 2017 பெப்ரவரி 22 திகதிய அமைச்சரவை தீர்மானம் இலக்கம் அமப/17/0295/719/026 மூலம் அங்கீகாரம் வழங்கி 06 ஆண்டுகள் கடந்துள்ள போதும், புதிய சட்டத்தை தயாரிக்க சபைக்கு இதுவரை இயலாதுள்ளது. | பதில் வழங்கப்படவில்லை. | அமைச்சரவை தீர்மானம பிரகாரம் சபையின் நோக்கங்களிற்கு பொருந்தும் புதிய சட்ட நகழ் ஒன்றை தயாரித்தல். |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆண்டில் சபையினால் கையடக்க தொலைபேசி ஊடாக குருந் தகவல் சேவை மூலம் லொத்தர் சீட்டு விற்பனையை | நவீன தொழிநுட்ப போக்கு உறுவானதுடன் சபையினால் SMS சேவை மாத்திரமன்றி | நவீன தொழிநுட்ப முறைமை ஊடாக சபையின் லொத்தர் விற்பனையை அதிகரித்துக் |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த சேவையை ஆரம்பித்து இதுவரை 07 ஆண்டுகள் கடந்துள்ள போதும் 03 விற்பனை முகவர்கள் மூலம் மொத்த லொத்தர் சீட்டு விற்பனை அளவில் 01 சதவீதத்திற்கும் குறைந்த பெறுமானம் விற்கப்பட்டிருந்தது. தற்போதுகுருந் தகவல் சேவை ஊடாக லொத்தர் சீட்டு விற்பனையை அதிகரித்துக் கொள்ள அதிக சந்தர்ப்பம் காணப்பட்ட போதும், அந்த சந்தர்ப்பத்தில் பயன்பெற முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | Web இணையம், தொலைபேசி Web Optimize mobile app ஊடாக விறபனைக்காக Digital விற்பனை முகவர்புரத்தை ஏற்படுத்த முறையான கலந்துரையாடல் நடாத்தி விற்பனை முகவர்புரத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகின்றது. | கொள்ள செயற்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் மீளாய்வாண்டில் மொத்தமாக ரூபா 650,877,152 ஆன வரிக்கு பின்னரான இலாபத்தை பெற்றிருந்த போதும், விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக செலவு, நிர்வாக செலவு மற்றும் ஏனைய செலவுகளை சீராக்க முன்னர் கொவிசத, தன நிதான, ஹதஹன, லகீ சவன், மெகா 60 மற்றும் மெகா மில்லியன் ஆகிய லொத்தர்களினால் ரூபா 699,603,774 ஆன நட்டம் அடையப்பட்டிருந்தது. சபை ஒவ்வொறு லொத்தர்களிற்கும் வெவ்வேறாக இலாப/நட்ட கணக்கை செய்யாததால் பயன்படுத்துவோரிற்கு ஒவ்வொறு லொத்தர்களினதும் இலாப/நட்ட நிலைமை சரியாக முன்வைக்கப்படவில்லை. | ஏதிர்காலத்தில் ஆண்டிறுதி கணக்கினுள் ஒவ்வொறு லொத்தரிற்கும் வெவ்வேறாக இலாபத்தை கணக்கிட்டு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | ஒவ்வொறு லொத்தரிற்கும் வெவ்வேறாக இலாப நட்டம் கணக்கிடப்பட வேண்டும். |
| (இ) | 1963 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை 60 ஆண்டுகளிற்கு அதிக காலமாக வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட கட்டிடங்களில் வியாபார வளவை நடாத்தி வருவதுடன், மீளாய்வாண்டில் சபையினால் வியாபார வளவை நடாத்திச் செல்ல ரூபா 87,686,550 தொகை கட்டிட வாடகையாக செலுத்தியிருந்தது. அவ்வாறே சபையின் களஞ்சிய வசதிகள் தொடர்பாக உரிய ஆய்வின்றி நுகர்வோர் மேம்படுத்தல் பண்டங்களை கொள்வனவு செய்ததால் அந்த மேம்படுத்தல | தேசிய லொத்தர் சபைக்குரிய காணியில் நிர்மாணிக்க உத்தேசித்திருந்த கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகளை ஆரம்பிக்க முயன்ற போதும் மறு அறிவித்தல் வரை அரச நிறுவனங்களிற்காக கட்டிட நிர்மாணத்தை தற்காலிகமாக நிறுத்துவதற்கு அரசினால் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானத்தின் முன் அந்த நடவடிக்கை வெற்றி அளிக்காததால் பணிப்பாளர் | தேசிய லொத்தர் சபைக்கு சொந்தமான காணியை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பண்டங்களை களஞ்சியப்படுத்த 04 மாத காலத்திற்காக இன்னுமொரு கட்டிடத்தை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்து. எனினும் சபையினால் 2009 ஆண்டில் கொள்வனவு செய்த ரூபா 500 மில்லியன் பெறுமதியான 112.05 பர்சஸ் காணியொன்று கொழும்பு வொக்சோல் மாவத்தையில் காணப்படுவதுடன், அங்கு களஞ்சியமொன்று, சாரதி வதிவிடமொன்று மற்றும் வாகன தரிப்பிடமொன்றும் நடாத்திச் செல்லப்படுகின்றது. | சபை அங்கீகாரத்தின் கீழ் தற்போது தேசிய லொத்தர் சபையை நடாத்திச் செல்லும் கட்டிடத்தில் இருந்த உடன்படிக்கை காலஎல்லையை நீடித்துக் கொள்ளப்பட்டது. தேசிய லொத்தர் சபையின் விற்பனை உதவியாளர்களிற்கு 500 மிதிவண்டிகள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த மிதிவண்டிகளை வெளியில் களஞ்சியப்படுத்த முடியாததால், அந்த மிதிவண்டிகளிற்கு விற்பனை பலகை பொருத்த மூடப்பட்ட இடவசதி தேவை எனும் விடயங்களின் மீது வொக்சோல் களஞ்சியத்தில் போதாத இடவசதிகளை அந்த காணிக்கு அருகில் அமைந்துள்ள அரச நிறுவனமொன்றான ஜனதா தோட்ட அபிவிருத்தி சபைக்கு சொந்தமான களஞ்சியமொன்றை மாதாந்தம் ரூபா 60,000 வாடகை தொகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டது. | |

### 3.5 பெறுகைகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் 2023 ஏப்ரல் 01 முதல் 2024 மார்ச் 31 வரையான ஓராண்டு காலத்திற்கு 08 வகை லொத்தர்களை அச்சிடல், விநியோகித்தல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைக்க பெறுகைகள் நடவடிக்கைக, 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.3 இல் குறிப்பிடும் 38 வாரங்களினுள் பூர்த்தி செய்ய முடியாதிருந்ததுடன் 2021 ஜுன் 25 திகதி ஆரம்பித்திருந்த அந்த பெறுகைகள் நடவடிக்கையை பூர்த்தி செய்ய 2023 மார்ச் வரை 01 ஆண்டு 09 மாதங்கள் கடந்திருந்தது. | இந்த பெறுகைகள் செயற்பாட்டை ஆரம்பித்த காலத்தினுள் நாட்டினுள் நிச்சமற்ற பாரதூரமான கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை காணப்பட்டதுடன் அதன் விளைவாக பல தடைகளிற்கு பெறுகைகள் நிறுவனத்திற்கு முகங்கொடுக்க நேரிட்டது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட மின்சார மற்றும் எரிபொருள் உள்ளிட்ட வலுசக்தி நெருக்கடி மற்றும் ஏனைய நிகழ்வுகள் காரணமாக நாட்டில் நிலவிய புரட்சி நிலைமை காரணமாக ஏற்பட்ட போக்குவரத்து பிரச்சினை, மொத்த | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளை பின்பற்றி உரிய காலத்தினுள் பெறுகைகள் செயற்பாட்டை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆளணினரையும் கடமைக்கு அழைத்தல் கடினம் மற்றும் ஊரடங்கச் சட்டம் அமுல்படுத்திமை போன்றே அமைச்சரவை பெறுகைகள் குழு உறுப்பினர்கள் அடிக்கடி மாறியமை பெறுகைகள் செயற்பாட்டை பூர்த்தி செய்ய தடையாக இருந்துள்ளன. | |
| (ஆ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மற்றும் செயற்பாட்டுக் கோவையின் 4.2.2 மற்றும் 4.2.3 இன் அறிவுறுத்தல் பிரகாரம் போன்றே 2018 பெப்ரவரி 16 திகதிய இலக்கம் PMU 03 கொண்ட பெறுகைகள் மேற்பார்வை சுற்றறிக்கை மூலம் அறிமுகம் செய்துள்ள படிவம் பிரகாரம், இந்த பெறுகையின் நேரசூசியை தயாரிக்கும் போது, விலைமனு ஆவணத்தை தயாரிப்பது வரையான முன்னரான பெறுகைகள் செயற்பாடுகள் உள்ளிட்டு பெறுகைகள் நேரசூசி தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | செயற்படுத்தவுள்ள எதிர்வரும் பெறுகைகளிற்காக மொத்த பெறுகைகள் செயற்பாடுகளையும் உள்ளடக்கி பெறுகைகள் நேரசூசி தயாரிக்கப்படும். | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.1 பந்தி பிரகாரம், தொழிநுட்ப அளவுத் திட்டத்தை திட்டமிடல் போன்றவை உள்ளிட்ட விலைமனு கோரும் ஆவணத்தை நகழ் செய்தல், தொழிநுட்ப ஆய்வுக் குழுவை நியமிக்க முன்னர் பெறுகைகள் நிறுவனத்தினால் ஆரம்பிக்க வேண்டிய போதும்,தொழிநுட்ப ஆய்வுக் குழுவை நியமித்த பின்னர் அந்த பெறுகைகளிற்கு உரிய விலைமனு ஆவணத்தை தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. இதனால் தொழிநுட்ப ஆய்வுக் குழு விலைமனு ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திருத்துவதற்கு 2021 ஆகஸ்ட் 04 திகதி முதல் 2022 மார்ச் 08 திகதி வரை 06 குழுக் கூட்டங்களின் மூலம் 07 மாதங்களிற்கு அதிக காலம் செலவிடப்பட்டிருந்தது. | தொழிநுட்ப ஆய்வுக் குழுவை நியமிக்க முன்னர் பெறுகைகள் நிறுவனத்தினால் விலைமனு ஆவண நகழ் செய்ய ஆரம்பித்ததுடன் 2021.08.04 திகதி முதலாம் தொழிநுட் ஆய்வுக் குழுக் கூட்டம் நடந்ததுடன் அன்றைய தினம்தொழிநுட்ப ஆய்வுக் குழுவினால் அந்த நகழை பரீட்சித்த பின்னர் அதன் போது நாட்டினுள் ஏற்பட்டிருந்த நிலைமைக்கு ஏற்றவாறு ஆய்வு பிரமாணங்களின் மற்றும் தொழிநுட்ப அளவுத் திட்டங்களின் மேற்கொள்ள வேண்டிய காலத்திற்கு ஏற்ற திருத்தங்களை மேற்கொள்ள 07 மாதங்களிற்கு கிட்டிய காலம் செலவிடப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் மற்றும் செயற்பாட்டு வழிகாட்டியின் இலக்கம் 7.4, 7.5 | இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டு இருந்தால் ஏற்பட்டிருந்த கடதாசி மற்றும் அச்சு மை | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம், விலைமணு செல்லுபடியாகும் காலத்தினுள் ஒப்பந்தத்தை வழங்க பெறுகைகள் நிறுவனத்திற்கு முடியுமானவாறு, இணங்கிய பெறுகைகள் நேரசூசியின் குறிப்பிடப்படும் கால சட்டகத்தினுள் மற்றும் பெறுகைகள் செயற்பாட்டு வழிகாட்டியின் 5.3.10 பிரகாரம், இந்த பெறுகையின் நியாயமாக விலைமணு செல்லுபடியாகும் தன்மைக்காக உயர்ந்த பட்ச காலத்தின் 50 சதவீத காலம் உள்ளடங்களாக தொழிநுட்ப ஆய்வுக் குழுவினால் ஆய்வறிக்கையை பூர்த்தி செய்ய வேண்டிய போதும், இந்த பெறுகையின் தொழிநுட்ப ஆய்வுக் குழு அறிக்கையை முன்வைக்க விலைமணு திறந்த திகதி முதல் 201 நாட்கள் செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே ஒரு வருட காலத்திற்கு மாத்திரம் வழங்கப்பட்டிருந்த இந்த பெறுகையின் விலைமணு செல்லுபடியாகும் காலம், விலைமணு கோரிய காலம் உள்ளடங்களாக 04 சந்தர்ப்பங்களில் 2023 பெப்ரவரி 20 வரை 300 நாட்களான நியாயமற்ற காலமொன்று நீடிக்கப்பட்டு இருந்தது. அவ்வாறே ஆய்வுக் குழு பெறுகைகள் செயற்பாட்டு வழிகாட்டியின் 5.3.10 பிரகாரம் நடவடிக்கை எடுக்காததால் குறைந்த விலைமணு சமர்ப்பித்து இருந்த நிறுவனமொன்று பின்னர் விலைமணுவை அதிகரித்ததால் ஆய்விலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | உள்ளிட்ட மூலப்பொருள் பற்றாக்குறை காரணமாக கொவிசெத மற்றும் ஹதஹன லொத்தர் சீட்டுக்களை மீண்டும் சந்தைக்கு விநியோகிக்க அந்த லொத்தர் சீட்டுக்களை அச்சிட குருங்கால பெறுகையையும் ஆரம்பித்து இருந்ததுடன் அதற்காக கோரிய விலைமணு ஆவணங்களை திறக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது 2022.04.22 ஆம் திகதியாகும். அதற்காக நியமிக்கப்பட்டது இந்த பிரதான பெறுகை செயற்பாட்டிற்காக நியமிக்கப்பட்ட தொழிநுட்ப ஆய்வுக் குழுவே ஆவதுடன் கொவிசெத மற்றும் ஹதஹன லொத்தர் சீட்டுக்களை மீண்டும் சந்தைக்கு விநியோகிப்பதற்குரிய தொழிநுட்ப ஆய்வுக் நடவடிக்கைக்காக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. பின்னர் சாதகமான பதில் வழங்கிய மணுதாரர்களுடன் விலை கலந்துரையாடல் ஒன்றை (Price negotiation) மேற்கொள்ளுமாறு பெறுகைகள் குழுவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதுடன் அதன் பிரகாரம், தொழிநுட்ப ஆய்வுக் குழுவின் இறுதி அறிக்கை 2022.11.22 திகதி நிலையான பெறுகைகள் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | வேண்டும். |
| (உ) | லொத்தர் சீட்டு அச்சிடுவதற்காக இருக்க வேண்டிய “Fan Folding Mechanism” எனும் விஷேட அங்கம் இல்லாததால் முக்கிய வெளியீடாக ஆரம்ப விலைமணு ஆய்வில் அகற்றிய நிறுவனமொன்றை பின்னர் அதற்கு பதிலாக வேறு தொழிநுட்பத்தை பயன்படுத்துவதாக குறிப்பிட்டு, சாதகமான பதில் வழங்கியுள்ள சாதகமான மணுதாரராக மீண்டும் ஆய்விற்குட்படுத்தி கொவிசத மற்றும் ஹதஹன இரண்டு | லொத்தர் சீட்டு அச்சிடுவதற்காக பயன்படுத்தும் “Fan Folding Mechanism” எனும் அளவுத் திட்டம் இல்லாததால் அகற்றிய நிறுவனத்தை பின்னர் பெறுகை குழு அங்கீகாரத்தின் மீது மேற்கொண்ட கைத்தொழிற்சாலை பரீட்சிப்பின் போது அச்சிடும் லொத்தர் சீட்டின் நிறை குறியீட்டு இலக்கம் சரியான | லொத்தர் சீட்டு இடை தரகர்கள் குறையும் ஆபத்து அற்றுப் போகும் வகையில் லொத்தர் சீட்டுக்களை அச்சிட கவனம் செலுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | லொத்தர் சீட்டுக்களை அச்சிட விலைமனு ஒப்படைக்கப்பட்டு இருந்தது. எவ்வாறாயினும், சபையினால் விற்பனைக்காக லொத்தர் சீட்டுக்களை விநியோகிக்கும் போது மற்றும் மீண்டும் பெற்றுக் கொள்ளும் போது, லொத்தர் சீட்டு இடை தரகர்கள் குறையும் ஆபத்து அகன்றிறுக்கவில்லை. | ஒழுங்கில் அச்சிடப்படுகின்றனவா என உறுதிசெய்து கொள்ள 06 கட்டங்களுடன் கூடிய முறைமையை பயன்படுத்துவதாக தொழிநுட்ப ஆய்வுக் குழுவினால் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம், அந்த நிறுவனம் சாதகமான பதில் வழங்கிய வெள்ளிகரமான மணுதாரராக கருதியதுடன் அவர்களினால் பின்பற்றும் அந்த முறைமையை ஏனைய மணுதாரர்களுக்கு ஒப்பாக தொழிநுட்ப ரீதியாக உயர் தரத்தை வெளிப்படுத்தாத போதும் 06 கட்டங்களுடன் கூடிய முறைமை ஊடாக லொத்தர் சீட்டுக்களின் பக்கம் மாற்றமடைவதனை தவிர்த்துக் கொள்ள முடியுமென தொழிநுட்ப ஆய்வுக் குழுவினால் அவதானிக்கப்பட்டது. | |
| (ஊ) | சபை 2023 ஏப்ரல் 01 முதல் செப்டம்பர் 30 வரையான காலத்தினுள் லொத்தர் சீட்டு அச்சிடல் மற்றும் கொண்டு வந்து ஒப்படைப்பதுடன் தொடர்பான வழுக்களை இனங்காண்பதற்காக குழுக் கூட்டங்கள் நடாத்தியிருந்த போதும், அக் காலத்தின் பின்னர் மீளாய்வாண்டு திசெம்பர் 31 வரை வழுக்களை இனங்காண்பதற்காக குழுக் கூட்டங்களை நடாத்தி இருக்காததுடன் லொத்தர் சீட்டுக்களின் வெளிப்படைகாப்பு மூடப்பட்டு கண்ணிற்கு தெரியாமை, நிறம் மாற்றமடைத்தல், மை துவர், இலக்க அளவுகளின் மாற்றம் உள்ளிட்ட வழுக்கள் லொத்தர் சீட்டுக்களில் காணப்பட்ட போதும், அந்த வழுக்களை இனங்கண்டு தண்டப் பணம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சந்தையிலிருந்து அறிக்கையிடப்படுவது பாரியளவிலான அச்சு வழுக்கள் மாத்திரம் ஆவதுடன் காப்பு பூச்சு தெரியாமை, மை துவர், எழுத்து தெளிவின்மை போன்ற வழுக்கள் அறிக்கை இடப்படுவதில்லை. எவ்வாறாயினும், மேற்குறித்த நிலைமையை கவனத்திற் கொண்டு நிலைமை பரீட்சிக்கும் முறைமை மற்றும் தண்டப்பணம் அறவிடும் முறையை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றது. | லொத்தர் சீட்டுக்களின் தரத்தை பாதுகாத்துக் கொள்ள தொடர் தகைமை பரீட்சிப்பை மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | சபைக்கு முன்கூடிய முயற்சியாளர் வளத் திட்டத் தொகுதியொன்றை (ERP) அபிவிருத்தி செய்தல், வழங்கல், நடைமுறைப்படுத்தல், இஸதாபித்தல், பயிற்றுவித்தல் மற்றும் பராமரிப்பதற்கான | தகைமையுடைய வழங்குனர் நிறுவனத்திலிருந்து ரூபா 96,788,864 மணு விலைக்கு இத் தொகுதியை அபிவிருத்தி செய்யதல் வழங்கல் செயற்படுத்தல் இஸ்தாபித்தல் | தொகுதியை இஸ்தாபிக்க செல்லும் மொத்த கிரயத்தை கவனத்திற் கொண்டு குறித்த அதிகார எல்லையின் கீழ் பெறுகைகள் |

| | | | |
|---|---|---|---|
| | பெறுகைகள் ஓராண்டின் பராமரிப்பு கிரயத்தை மாத்திரம் கவனத்திற் கொண்டு ரூபா 96,788,864 ஆன மனு விலைக்கு 04 ஆண்டுகால எல்லைக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்த பெறுகையின் 04 ஆண்டுகளில் ரூபா 394 மில்லியனான மொத்த கிரயத்தை கவனத்திற் கொண்டால் அரச பெறுகைகள் வழிகாட்டி 2.14.1 மற்றும் அதனுடன் தொடர்புடைய 2017 மார்ச் 15 திகதிய இலக்கம் 33 கொண்டவிதிவிலக்குகள் பிரகாரம், இந்த பெறுகை அமைச்சின் பெறுகைகள் குழுவின் கீழ் மேற்கொள்ள வேண்டிய போதும், அதற்கு மாற்றமாக திணைக்கள பெறுகை குழு அதிகார மட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பயிறுவித்தல் மற்றும் முதலாம் ஆண்டு பராமரிப்பு உள்ளடங்களாக மொத்த வளத் தொகுதியொன்றை கொள்வனவு செய்தல் திணைக்கள பெறுகை குழு அதிகார எல்லையின் கீழ் காணப்படுவதால் அத் தொகுயை கொள்வனவு செய்ய தொழிநுட்ப ஆய்வுக் குழு பரிந்துரை மற்றும் திணைக்கள பெறுகை குழு அங்கீகாரம் வழங்கி மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>கிரய மீளாய்வு மற்றும் தொழிநுட்ப துறையின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு மேலும் 04 ஆண்டுகளிற்காக இத் தொகுதியை பராமரிக்க பொருத்தமென தொழிநுட்ப ஆய்வுக் குழு பரிந்துரை மற்றும் திணைக்கள பெறுகை குழு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளன. | நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். |
| (ஏ) | சபையினால் மஹஜன சம்பத் லொத்தர் சீட்டிழுப்பிற்காக பயன்படுத்தும் இயந்திரம் உரியவாறு செயற்படாமை, இயந்திரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளும் இலக்கம், எழுத்து மற்றும் இலக்கினத்துடன் கூடிய கோளம் இயந்திரத்தினுள் நெரிசலடைவதன் காரணமாக, இயந்திரத்தை மீண்டும் மீண்டும் இயக்க வேண்டி ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் சீட்டிழுப்பு செயற்பாட்டிற்காக சமுகமளிக்கும் கணக்காய்வு ஆளணியினரினால் அவதானிக்கப்பட்டுள்ளதுடன், 2022 ஆண்டில் கணக்காய்வு அறிக்கை மூலமும் இது பற்றி சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், 2022 ஆண்டில் சபையின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு மற்றும் பெறுகை திட்டத்திற்கு உட்படுத்தியிருந்த ரூபா 150 மில்லியனான Ball Drawing இயந்திரத்தை 2023 திசெம்பர் 31 வரை கொள்வனவு செய்ய சபைக்கு இயலாதிருந்தது. | தேசிய லொத்தர் சபைக்கு 14 கட்டங்ககளுடன் கூடிய சீட்டிழுப்பு இயந்திரமொன்றை கொள்வனவு செய்ய நிறுவனத்திற்கு ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | புதிய இயந்திரத்தை இஸதாபிகும் செயற்பாடுகளை விரைவில் முடிவுறுத்த வேண்டும். |
| (ஐ) | சபையினால் அறிவித்தல் விளம்பர முகவர் நிறுவனத்தை தெரிவு செய்வதற்காக கடைசியாக | செயலாற்றுகை பிணைமுறி BTL குழுக்களிற்காக தெரிவு செய்யும் அறிவித்தல் விளம்பர | பெறுகை நடவடிக்கைக்கு தெரிவு செய்யும் நிறுவனங்களுடன் சபை |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்படைத்திருந்த 2021/2022 ஆண்டிற்கான பெறுகைகள் 05 குழுக்களின் கீழ் 25 விளம்பர் நிறுவனங்களை தெரிவு செய்திருந்ததுடன் அந்த 13 நிறுவனங்களிடம் இருந்து செயலாற்றுகை பிணைமுறி பெற்றிருக்காததுடன் 15 நிறுவனங்களுடன் மாத்திரம் சபை எழுத்துமூல உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. | முகவர் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படவில்லை. தேசிய லொத்தர் சபையின் BTL செயற்பாட்டு தேவைப்பாடுகளிற்கு இணங்க தெரிவு செய்து பதிவு செய்த BTL அறிவித்தல் விளம்பர முகவர் நிறுவனங்களிடமிருந்து விலை கோரலொன்றை மேற்கொண்டு குறித்த ஒப்பந்தத்தின் பெறுமதிக்கு ஏற்ப மாத்திரம் பிணைமுறி பெற்றுக் கொள்ளல் மற்றும் கைச்சதாத்திடல் செய்யப்படுகின்றது. | எழுத்துமூல உடன்படிக்கைக்கு கைச்சாத்திட வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 செயல் நடவடிக்கை திட்டம்**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள** |
|---|---|---|---|
| (அ) | சபையின் மீளாய்வாண்டுசெயல் நடவடிக்கை திட்டத்தின் மூலம் சில லொத்த்ர் வகைகளிற்கு 14 விஷேட சீட்டிழுப்புக்களை நடாத்த திட்டமிட்டிருந்த போதும், திட்டமிட்ட காலத்தினுள் 5000 ஆவது மஹஜன சம்பத சீட்டிழுப்பை மாத்திரமே நடாத்தி இருந்தது. அவ்வாறே, உடனடி தீர்மானத்தின் மீது லொத்தர் சீட்டுக்களை அறிவும் செய்யாது அதற்காக ஏதேனும் திட்டத்தின் பிரகாரம் புதிய லொத்தர் சீட்டுக்களை அறிமுகம் செய்ய உள்ளக கட்டுப்பாட்டை தயாரித்துக் கொள்ள வேண்டுமென 2020 திசெம்பர் 04 திகதி பொது முயற்சிகள் செயற்குழு கூட்டத்தில் பரிந்துரை முன்வைக்கப்பட்டிருந்தது. | தேசிய லொத்தர் சபையின் அனைத்து லொத்தர் வியாபாரக் குறிகளும் காப்புச் செய்யப்படும் வகையில் ஒவ்வொறு காலத்தின் தேவை, இலக்கு வைத்த நுகர்வோர் குழுக்கள், போட்டி விஷேட தடவைகள் தொடர்பாக கவனம் செலுத்தி சிறந்த விற்பனையை பெற்றுக் கொள்ள விஷேட சீட்டிழுப்பு தடவைகள் நடாத்தும் திகதி, நடாத்தும் வியாபாரக் குறி வகைகளை தீர்மானித்து அதற்கு முன்னர் ஆண்டின் வரவு செலவு திட்டம் மற்றும் செயற்பாடுகளை திட்டமிடும் சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கப்பட்ட விஷேட சீட்டிழுப்புக்களை நடாத்தும் நாட்களை திருத்தத்திற்கு மற்றும் விரிவான திட்டத்திற்கு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று குறித்த விஷேட தடவைகள் செயற்படுத்தப்படுகின்றன. | விஷேட சீட்டிழுப்பு நடாத்துவது தொடர்பாக உள்ளக வழிகாட்டல்களை தயாரித்துக் கொள்ள வேண்டும். |
| (ஆ) | சபையினால் ரூபா 4.8 மில்லியன் பெறுமதியான முகாமைத்துவ மென்பொருள் தொகுதியொன்றை பணிப்பாளர் சபைக்காக கொள்வனவு செய்து இஸ்தாபிக்க விலைமனு கோரி வழங்குனர் ஒருவரிற்கு 2024 பெப்ரவரி 07 | இந்த மென்பொருளை பணிப்பாளர் சபைக்கு வழங்கியுள்ள கனணிகள் மீது மாத்திரம் செயற்படுத்தப்படுவதுடன், ERP போன்ற ஒருமுகப்படுத்தப்பட்ட கனணி தொகுதி ஒன்றூடாக | ERP தொகுதிக்கு பிரவேசிப்பை மட்டுப்படுத்தி இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் வகையில் பணிப்பாளர் சபை தகவல்களை |

| | | | |
|---|---|---|---|
| | திகதி மணு ஒப்படைக்கப்பட்டு இருந்தது. 2023 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படாத இவ்வாறான அதிக கிரயம் கொண்ட மென்பொருள் தொகுதியொன்றை கொள்வனவு செய்யும் தேவைப்பாடு மற்றும் அதற்காக செலவாகும் கிரயம், அனுகூலங்கள் கணக்காய்விற்கு தெளிவாகாததுடன், அதனை ரூபா 96.79 மில்லியன் செலவில் மேற்கொள்ளும் ERP தொகுதி மூலம் செய்து கொள்வது தொடர்பில் பணிப்பாளர் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டுப்படுத்தும் தகவல் தொகுதிக்கு பணிப்பாளர் சபை தகவல்கள் நேரடியாக தொடர்புபட்டு அந்த தகவல்களின் இரகசியத் தன்மையை பேணிக் கொள்ளும் பிரச்சினைக்குரிய நிலைமையொன்று ஏற்பட முடியுமாகையால் அநேக அரச மற்றும் தனியார் வியாபாரங்களின் பணிப்பாளர் சபை கூட்டங்களை நடாத்த பயன்படுத்தும் இந்த மென்பொருள் அது தொடர்பான நிபுணத்துவ நிறுவனமொன்றின் மூலம் பாதுகாப்பு முறைமையொன்றின் கீழ் மற்றும் சரியான ஏற்றுக் கொண்ட நிலைமையின் கீழ் குறித்த பணிகளிற்கு விஷேடமாக ஆக்கப்பட்டுள்ளது. | பேணிக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |
| (இ) | சுபையினால் 2023 ஆண்டிற்காக தயாரித்திருந்த செயல் நடவடிக்கை திடடம் மற்றும் ஆண்டிறுதியில் அதன் முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது மீளாய்வாண்டினுள் மேற்கொள்ள வேண்டிய 98 பணிகள் குறிப்பிடப்பட்டிருந்தது. அவற்றிற்கிடையில் 28 பணிகளை மீளாய்வாண்டில் ஆரம்பித்து இருக்காததுடன் 18 பணிகள் பூர்த்தியடையாது காணப்பட்டன. மேலும், பூர்த்தயடையாத பணிகளில் பூர்த்தி செய்த அளவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | 2023 ஆண்டில் ஆரம்பித்து செய்து கொண்டு செல்லுகின்ற போதும் அதன் பூர்த்தியடைந்த அளவுகள் சில நடவடிக்கைகளில் அளவு ரீதியாக குறிப்பிட முடியாது. அந்த செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெறுவதுடன் 2024 ஆண்டின் செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்தியுள்ளதுடன் அது தொடர்பான முன்னேற்றத்தை 2024 ஆண்டில் செயல் நடவடிக்கை திட்ட முன்னேற்றத்துடன் பின்னர் சமர்ப்பிக்க முடியும். | செயல் நடவடிக்கை திடடத்தில் உள்ள பணிகளின் முன்னேற்றத்தை கால ரீதியாக பரீட்சிக்க வேண்டும். |